.

அன்புடையீர்,

வணக்கம். இந்நகராட்சியின் மே 2018–ம் மாத சாதாரணக்கூட்டம் வருகிற 31.05.2018 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920–**ன் படி **124–D(13)** ன்படி நகராட்சியால் தொழில் வரி விகிதங்கள் ஐந்து ஆண்டிற்கு ஒரு முறை திருத்தம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு திருத்தம் மேற்கொள்ளும் போது வரி உயர்வு 25 சதவிகிதத்திற்கு குறையாமலும் 35 சதவிகிதத்திற்கும் மிகாமலும் இருக்க வேண்டும் . மேலும் ARTICLE 276 CLAUSE (2) CONSTITUTION OF INDIA ன் படி உயர்ந்தபட்ச தொழில் வரி ஒரு ஆண்டிற்கு ரூ.**2500/–** மேல் மிகையாமல் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் திருத்தப்பட்ட ஐந்து ஆண்டு முடிவடைந்ததால் **01.10.2018** முதல் தொழில் வரி விகிதத்தினை உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| அரையாண்டு வருமானம் | 01.10.2013 நடைமுறையில் உள்ள அரயாண்டிற்கான தொழில்வரிக்கான தொகை ரூ. | 01.10.2018 முதல் 25% உயர்வு செய்த தொகை ரூ. |
|---|---|---|
| ரூ.20000 வரை | இல்லை | இல்லை |
| ரூ.20001 முதல் 45000 வரை | ரூ.130/– | ரூ.165/– |
| ரூ.30001 முதல் 45000 வரை | ரூ.330/– | ரூ.420/– |
| ரூ.45001 முதல் 60000 வரை | ரூ.620/– | ரூ.780/– |
| ரூ.60001 முதல் 75000 வரை | ரூ.940/– | ரூ.1180/– |
| ரூ.75001 அதற்கு மேல் | ரூ.1230/– | ரூ.1250/– |

**அலுவலக குறிப்பு:–**

1. தற்போது நடைமுறையில் உள்ள தொழில் வரி விகிதங்களை **01.10.2018** முதல் 25% உயர்வு செய்யலாம்.
2. இதற்கான விளம்பர செலவினத்திற்கு அனுமதி வழங்கலாம்.

**அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.எ5/3124/2018.**

**தீர்மான எண் 861 அனுமதி வழங்கப்படுகிறது.**

**2.**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் டி.10 எண் .3141/2018 நாள் **20–04–2018** ல் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிக்கு **2018–2019** ம் ஆண்டிற்கான நகராட்சி பங்கு தொகை ரூ.**2500/–** ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே **2018–2019** ம் ஆண்டிற்கான

நகராட்சி பங்கு தொகை ரூ.2500/—ஐ இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.சி1/1350/2015.**

**தீர்மான எண் 862 அனுமதி வழங்கப்படுகிறது.**

**3.** ஆணையாளர் பெரு நகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் பொ,து,ந.க.எண் இ7/7848/2018 நாள்:06—04—2018 ல் சென்னை பெரு நகர மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் திருமதி. நா.வைரம் அவர்கள் தனது கணவர், இரண்டு பெண் குழந்தைகள், வயதான மாமனார் மற்றும் மாமியார் ஆகியோர் சொந்த ஊரான உதகமண்டலத்தில் வசித்து வருவதாகவும் அவர்களை தன்னால் சரிவர கவனிக்க இயலவில்லை எனவும், உதகமண்டலம் நகராட்சியில் சுகாதார ஆய்வாளர் பணியிடம் காலியாக இருப்பின் பணிமாறுதல் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியாரை பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து உதகமண்டலம் நகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதலில் எடுத்துக்கொள்வது தொடர்பாக கருத்துரையினை தெரிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒன்பது சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் தற்போது ஏழு துப்புறவு ஆய்வாளர் பணிபுரிந்து வருகின்றனர். இரண்டு பணியிடம் காலியாக உள்ளது. எனவே மேற்கண்ட காலியாக உள்ள துப்புரவு ஆய்வாளர் பணியிடத்திற்கு சென்னை பெருநகர மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் திருமதி.நா.வைரம் எனபவரை பணி மாறுதல் செய்ய பரிந்துரைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.சி1/3011/2018.**

**தீர்மான எண் 863அனுமதி வழங்கப்படுகிறது.**

**4.** உதகமண்டலம் நகராட்சி பகுதியில் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சியில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் கட்டிட விண்ணப்பங்களுக்கு உரிம கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக. திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 217சி (1) ன் படி புதிய உரிமக்கட்டணங்களை 1/04/2014 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

தற்போது உரிமக்கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு நான்காண்டுகள் முடிவடைந்த நிலையில் கட்டணங்கள் மிகவும் குறைவாக உள்ளதாகவும் அதனை உயர்வு செய்ய மேல் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு கட்டிட உரிமக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை மறு நிர்ணயம் செய்வது தொடர்பாக உதகை நகராட்சி தனது 658 ம் எண் கொண்ட 31/1/2018ம் தேதிய தீர்மானம் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்படி உயர்வு செய்யப்பட்ட கட்டண விபரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நாளிதழில் பிரசுரம் செய்ய செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்து அதற்கான பட்டியல் தொகை ரூ.40,232/— ஐ வழங்கக் கோரிள்ளார். மேற்படி பட்டியல் தொகை வழங்குவது தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.எப்1/1293/2008.
**தீர்மான எண் 864 அனுமதி வழங்கப்படுகிறது.**

**5.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெற உள்ள கோடை விழாவை முன்னிட்டு கூடுதலாக துப்புறவு பணியாளர்களை கொண்டு துப்புறவு பணியினை மேற்கொள்ள 03.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில். |
|---|---|---|
| 1 | திருவாளர்.ஸ்டார் காண்டக்டர் 108/17,186/2 ஆம்ஸ் ஹவுஸ் ரோடு ஊட்டி | ரூ.4,27,200/– |
| 2 | திருவாளர்.பஷீர் த/பெ சலீம் 34 கேத்தி, பிரகாஷ்புரம் குன்னூர் | ரூ.4,31,200/– |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.ஸ்டார் காண்டக்டர் 108/17,186/2 ஆம்ஸ் ஹவுஸ் ரோடு ஊட்டி அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–**
அனுமதி வழங்கலாம்.
**தீர்மான எண் 865 அனுமதி வழங்கப்படுகிறது.**

**6.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கார்டன் சாலை கேசினோ ஹோட்டல் எதிர்ப்புறம் உள்ள சர்வே எண்.C/16/79 கொண்ட 10.50 சென்ட் பரப்பளவு கொண்ட காலியிடமானது நகர நில அளவை ஆவணங்களின் படி உதகை நகராட்சி என பதிவினைக் கொண்டுள்ளது.
மேற்படி இடத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பூங்காவாக பராமரிப்பு செய்ய மேலாளர் இந்தியன் வங்கி, உதகமண்டலம் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. உதகை நகரின் அழகினை மேம்படுத்தும் வகையிலும் கார்டன் சாலையில் சுற்றுாலாப்பயணிகளைக் கவரும் வகையிலும் பூங்காவாக பராமரிப்பு செய்ய மேலாளர் இந்தியன் வங்கி, உதகமண்டலம் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. உதகை நகரின் அழகினை மேம்படுத்தும் வகையிலும் கார்டன் சாலையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும் பூங்கா அமைக்க மேலாளர், இந்தியன் வங்கி, உதகமண்டலம் அவர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**நிபந்தனைகள்**

1. மேற்படி இடத்தில் பூங்கா அமைக்கும் பட்சத்தில் எந்த ஒரு தற்காலிக அல்லது நிரந்தர கட்டிடமும் அமைக்ககூடாது .
2. பூங்கா இடத்தில் மின் வசதி தேவைப்படும் பட்சம் ஆணையாளர், உதகமண்டலம் நகராட்சி என்ற பெயரில் மின் இணைப்பு பெற வைப்புத் தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனம் செலுத்துவதுடன் மாதாந்திர மின் கட்டணமும் அந்த நிறுவனமே ஏற்க வேண்டும் மற்றும் தவறாமல் செலுத்தி வர வேண்டும் .

3. பூங்கா பராமரிப்பு செய்திட உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு உத்தரவு வழங்கப்படும். மேற்படி நிறுவனத்தின் பராமரிப்பு திருப்திகரமாக இல்லாத நிலையில் பராமரிப்பு அனுமதி இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. பூங்கா இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அனுமதியை ரத்து செய்து நகராட்சி தன்வசப்படுத்திக்கொள்ளும்.
5. பூங்கா இடம் தொடர்பாக மேற்படி நிறுவனம் ஆணையாளர் உதகமண்டலம் நகராட்சி அவர்களை மட்டுமே அணுக வேண்டும். மாறாக எவ்வித நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளக்கூடாது.
6. பூங்காவாக பராமரிக்கப்படும் நிலையில் நகராட்சிக்கு அந்த இடம் தேவைப்படும் பட்சத்தில் மேற்படி நிறுவனம் பூங்காவினை நிலையில் உள்ளவாறு நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். அதில் எவ்விதமான சேதாரமும் ஏற்படுத்தக்கூடாது.
7. பூங்காவினை எவ்விதமான வணிக நோக்கமாகவோ அல்லது மத சம்பந்தமான உபயோக காரியங்களுக்கோ பயன்படுத்தக்கூடாது.
8. பூங்கா இடத்தில் எந்த ஒரு விளம்பரமும் செய்யக்கூடாது நகராட்சியின் அனுமதி பெற்று உரிய அளவுகளில் நிறுவனத்தின் பராமரிப்பு செய்யப்படும் விபரத்தை மட்டும் பார்வைக்கு வைக்கலாம். நிறுவனத்தின் LOGO மட்டுமே பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.
9. பூங்கா இடத்தினை நகராட்சி அலுவலர்கள் எந்த நேத்திலும் ஆய்வு செய்யலாம்.
10. பூங்காவிற்கு பெயரிடும் போது உதகமண்டலம் நகராட்சி பூங்கா என பெயரிடப்பட வேண்டும்.
11. மேற்கண்ட நிபந்தனைகளை ரூ.20க்கான முத்திரை தாளில் குறிப்பிட்டு கையொப்பம் இட்டு ஒப்பந்த பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

**அலுவலக குறிப்பு:—**

**மன்றம் அனுமதி வழங்கலாம். பூங்கா பராமரிக்க வேண்டியதன் அவசர அவசியத்தை முன்னிட்டு நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் செய்யலாம்.**

**தீர்மான எண் 866 அனுமதி வழங்கப்படுகிறது.**

**7.** நகராட்சிக்கு சொந்தமான படகு இல்லம் செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கும் மற்றும் சுற்றுலா பயணிகள் செல்ல போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது மேலும் மே மாதத்தில் ஆண்டுதோறும் உதகை நகரில் கோடை விழா நடைபெறுவதால் மலர் கண்காட்சி நடைபெறுவதாலும் இந்நகர் பகுதிக்கு ஏராளமானோர் மக்கள் வருகின்றனர் எனவே பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையை பராமரிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.17.60 லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 867 அனுமதி வழங்கப்படுகிறது.**

**8.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் **09.05.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்ய திட்ட வரைவு தயார் செய்யும் பணி | 9.00 | 1.திரு.M/s.spt consultancy தொகை ரூ.9,00,000/– மதிப்பீட்டிற்கு சமமாக<br>2. திரு.M/s.R.R. Harshi தொகை ரூ.9,60,000/– அதிகமாக 6.67% | 1. திரு. M/s.Spl consultancy தொகை ரூ.9,00,000/– மதிப்பீட்டிற்கு சமமாக |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 868 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**9.** இந்நகராட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் 22.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத்தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்ச் சாலை ஒக் வுட் காட்டேஜ் பகுதியில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 15.00 | 1. திரு.நந்தகுமார் தொகை ரூ.13,76,497/– சதவீதம் 4.95% (+) அதிகமாக<br>2.திரு.ரவிக்குமார் தொகை ரூ.13,87,250 சதவீதம் 5.77%(+) அதிகமாக | திரு.நந்தகுமார் தொகை ரூ.13,76,497/– சதவீதம் 4.95% (+) அதிகமாக |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

**மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட 4.95% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அதிகரித்துள்ளதால் கூடுதல் தொகை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**தீர்மான எண் 869 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**10.** உதகமண்டலம் நகராட்சிக்கட்பட்ட 59 சமுதாய கழிப்பிடங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைக்க தேவையான ஈ மருந்தான (Lemon Grass oil) வாங்க கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. (Lemon Grass oil) வாங்க கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.Sri.Balaji Marketing,<br>Exporter & Distributor,<br>Bazaar street,<br>Dindugul. | Qty 1 Lit<br>Rs.2990/– |
| 2. Sri.Vinayaga Pharma<br>33,Venkaraman street<br>Pollachi-1 | Qty 1 Lit<br>Rs.4500/- |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்ஸ், திண்டுக்கல் அவர்களுக்கு விலைப்புள்ளியை ஏற்கவும், மற்றும் பணி உத்திரவு அதற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 870 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**11.** உதகமண்டலம் நகராட்சிக்கட்பட்ட 41 பொது கழிப்பிங்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைக்க தேவையான ஈ மருந்தான (Lemon Grass oil) வாங்க கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.Sri.Balaji Marketing,<br>Exporter & Distributor,<br>Bazaar street,<br>Dindugul. | Qty 1 Lit<br>Rs.2990/– |
| 2. Sri.Vinayaga Pharma,<br>33,Venkatraman street,<br>Pollachi-1. | Qty 1 Lit<br>Rs.4500/- |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்ஸ், திண்டுக்கல் அவர்களுக்கு விலைப்புள்ளியை ஏற்கவும், மற்றும் பணி உத்திரவு அதற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 871 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**12.**இந்நகராட்சி TN 43 E 9408 Agigator வாகனத்தின் தகுதி சான்றிதழ் முடிவடைந்துள்ளதாலும் மற்றும் வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. எனவே இதனை சரி செய்யும் பொருட்டு வாகனத்தின் பழுதகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,71,910/– நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண் E4/4173/18.**

**தீர்மான எண் 872 அனுமதி வழங்கப்படுகிறது.**

**13.**இந்நகராட்சி வாகனம் TN43 E 1203 JCB இயந்திரத்தின் டயர் மற்றும் பேட்டரி பழுது அடைந்து உள்ளது. எனவே இதை சரி செய்ய புதிய பேட்டரி மற்றும் டயர்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.1,79,800/– க்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண் E4/4172/2018.**

**தீர்மான எண் 873 அனுமதி வழங்கப்படுகிறது.**

**14.**இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுய நிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பற்றிய அறிக்கை நகர்மன்ற தீர்மான எண் 739 நாள் 26.03.2018 ன் படி 13.04.2018 ம் தேதிய தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. மேலும் இக்கட்ட திருத்தம் பற்றிய அறிக்கையை தினசரி நாளிதழில் வெளியிட்டு 30 நாட்களுக்கு மேல் ஆகியும் ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை. எனவே தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று நிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பற்றிய அறிவிக்கை (GAZETTE) மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாவட்ட அரசிதழ் (GAZETTE) வெளியீடு பக்கம் ஒன்றுக்கு ரூ.2100/– வீதம் நான்கு பக்கங்களுக்கு ரூ.8400/– மாவட்ட கருவூலம் உதகையில் செலுத்த நகர்மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண் அ1/2297/2018.**

**தீர்மான எண் 874 அனுமதி வழங்கப்படுகிறது.**

**15.**இந்நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள நகரமன்ற அரங்கில் மின் வெட்டு ஏற்படும் சமயங்களில் பயன்படுத்தும் வகையில் 25KVA Kirlosker Generator மற்றும் நகரமன்றத்திற்கு தேவையான புதிய Cardless, kireless Mic, Controller DVD Player USB Display மற்றும் பழுதடைந்துள்ள Syron Motor பழுத நீக்கம் செய்யவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு

தொகை ரூ.7.15 இலட்சம் நகரமன்ற தீர்மான எண்679/28.7.2016– ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் GST இனம் சேர்க்கப்படவில்லை , எனவே GST 12% தொகை ரூ.85,800/– மட்டும் ஒப்பந்ததாரருக்கு வழங்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 875 அனுமதி வழங்கப்படுகிறது.**

**16.** நீலகிரி மாவட்டத்தில் தற்போது தென்மேற்கு பருவமழை தொடங்கி உள்ளதால் உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்படும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் மக்களை பழைய உதகையில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள Flood Centre கட்டிடத்தின் தங்கவக்கப்படும் . எனவே மேற்கண்ட Flood Centre கட்டிடத்தின் கழிப்பறை, ஜன்னல், மற்றும் குடிநீர் வசதி, மின்சாரம் ஆகியவை சரி செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே மேற்கண்ட பணிகளை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 876 அனுமதி வழங்கப்படுகிறது.**

**17.**இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மினிகார்டன் கழிவு நீரேற்று நிலையத்தில் 50HP( Model KDS 50M 200) Non Clog நீர் மூழ்கி கழிவு நீரேற்றும் மோட்டார் பம்பு பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட மோட்டாரில் Rewinding of Starter top Mechnical Seal, Bottom Shed with face combination of silicon, seal Monitor Safety nilos rings “o” ring, Impeller, Reverse rotation arrangements மற்றும் அனைத்து பொருட்களையும் பொருத்தி ஆய்வு செய்யும் பணிகளுக்க ரூ.2.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண் 350/27.07.2017ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் GST-12% க்கான இனம் சேர்க்கப்படவில்லை, எனவே GST12% தொகை ரூ.28,800/– ஒப்பந்ததாரருக்கு வழங்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 877 அனுமதி வழங்கப்படுகிறது.**

**18.**இந்நகாட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பாதாளச்சகாக்கடை பைப்லைன் மற்றும் மேன்ஹோல்கள் உடைந்தும், பழுதடைந்தும் உள்ளதால் கழிவு நீர் தார் சாலையில் செல்வதால் தார்சாலை மற்றும் நடைபாதை சேதமடைவதுடன் அவ்வழியாக நடந்து செல்லும் பொது மக்களுக்கு துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயம் உள்ளது. எனவே நகராட்சிப் பகுதிகளில் உடைந்து உள்ள கழிவு நீர் பைப் லைன் மற்றும் மேன்ஹோலை உடனடியாக சரி செய்ய வேண்டியது அவசியம் ஆகும் . இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50/– இலட்சத்திற்கு பாதாளாச்சாக்கடை நிதியில் இருந்து பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மான எண் 878 அனுமதி வழங்கப்படுகிறது.**

**19.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தமிழகம் சாலை மற்றும் விவேகாநந்தர் சாலை, ராட்டன் டாட்டா சாலை ஆகிய இடங்களில் புதை வடிகால் குழாய்கள் மற்றும் தொட்டிகள் சில இடங்களில் புதை வடிகால் குழாய்கள் மற்றும் தொட்டிகள் சில இடங்களில் பழுதடைந்துள்ளது. சில இடங்களில் மேன்ஹோல் தொட்டிகள் ஒரு அடி உயரத்திற்கு உயர்த்தி பழுதடைந்துள்ள Precast Slab- களுக்கு பதிலாக புதிய Manhole cover அமைப்பது அவசியமானதாகும் கழிவு நீர் தார் சாலையில் செல்வதால் சுகாதார சீர் கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பழுதடைந்துள்ள தொட்டிகளை புதுப்பிக்கவும் MH ஒரு அடி உயரத்திற்கு உயர்த்தி புதிதாக MH Cover அமைக்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,80,000/– க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மேற் பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் ஏற்கலாம்.
**தீர்மான எண் 879 அனுமதி வழங்கப்படுகிறது.**

**20.**உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN43E1366 வாகனம் பழுது பணிகள் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர்.லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் ரூ.98,865/–
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர் ,
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்

2. ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ் ரூ.1,12,700/–
   சங்கர் நகர்,
   சேலம்

எனவே குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள திருவாளர்.லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், சேலம் மெயின் ரோடு, மேட்டூர். அவர்களுக்கு மேற்படி பணியை செய்ய உத்திரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.002611/எச்2/2018).
**தீர்மான எண் 880 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**21.**இந்நகராட்சி வாகனம் TN43E2638 Bolero Jeep ஒரு சில பழுதுகள் ஏற்பட்டுள்ளது மேற்படி வாகனத்தினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. அவசரம் அவசியம் இருப்பதால் மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1,30,000/– க்கு நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண் .இ4/3520/2018).

**தீர்மான எண் 881 அனுமதி வழங்கப்படுகிறது.**

**22.**நகராட்சிக்கு சொந்தமான தலையாட்டிமந்து பள்ளியின் கட்டிடத்தின் கூரை பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் அனைத்தும் வகுப்பறையின் உட்புறத்தில் செல்வதாலும் மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் கம்பியூட்டர்களுக்கு தேவையான மின்வசதி குழந்தைகள் பகல் உணவு உட்கொள்ளும் பொழுது அதற்கான குடிநீர் வசதி மற்றும் சில பராமரிப்பு பணிகள் இல்லாத காரணத்தால் பள்ளி குழந்தைகளுக்கு சிரமம் ஏற்படுகிறது. மற்றும் மேற்கண்ட பணிகள் செய்வதற்கு ரூ.8,20,000/– க்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் சில இனங்களுக்கு வழி வகை இல்லாத காரணத்தாலும் பணி நடைபெறும் சமயத்தில் பள்ளி தலைமையாசிரியர் அவர்களின் வேண்டுகோளின் படி பணிகள் செய்ய வேண்டி உள்ளதாலும் அவ்வாறு அப்பணிகள் செய்யும் பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்குள் செய்து முடிக்கவும் அப்பணிகளை செய்வதற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 882 அனுமதி வழங்கப்படுகிறது.**

**23.**இந்நகராட்சிக்கு உபட்ட வார்டு எண்:5 ல் வண்ணாரப்பேட்டை பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பள்ளி வளாகத்தில் தற்போது புதியதாக கட்டப்பட்ட வகுப்பறை கட்டிடத்திற்கு கூடுதல் பணியாக மின்சார பணிகள்,UPVC ஜன்னல் , மற்றும் கட்டிடத்தை சுற்றி மழைநீர் அரிக்காமல் இருக்க சிமெண்ட் கான்கிரிட் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளதால் மேற்கண்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.15 இலட்சத்திற்கு கல்வி நிதியின் கீழ் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 883 அனுமதி வழங்கப்படுகிறது.**

**24.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்:05 ல் உள்ள Old garden சாலையில் உள்ள மழைநீர்க் கால்வாய் ஆனது பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் செல்லாமல் தேங்கி நிற்கிறது இதனால் தார் சாலை பழுதடைவதுடன் அப்பகுதியில் வாகனங்கள் செல்லும் போது மிகவும் ஆபத்தான நிலை உள்ளது எனவே மேற்கண்ட கால்வாயில் பழுதடைந்த பகுதியை புதியதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.20 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 884 அனுமதி வழங்கப்படுகிறது.**

**25.**இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தலையாட்டி மந்து பள்ளி,காந்தல் உருது பள்ளி ஆகிய பள்ளிகளில் Smart Class படிப்புகள் தொடங்க உள்ளதால் அதற்கான உபகரணங்களில் Interactive Board 4' X 6' 2. Projector 3.Telescopic Braket Vu4 Card ஆகிய உபகரணங்கள் வாங்கி அவற்றை மேற்கண்ட பள்ளிகளில் பொருத்த வேண்டியுள்ளது. அதன் பிறகுதான் Smart Class வகுப்புகள் தொடங்க தேவையான உபகரணங்கள்வாங்கி பொருத்த

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7,50,000/– க்கு கல்வி நிதியின் கீழ் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 885 அனுமதி வழங்கப்படுகிறது.**

**26.** பாராளுமன்ற உறுப்பினர் நிதி **2017–2018** நிதியாண்டின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **21–ல்** செயின்ட் மேரீஸ்ஹில் சர்ச் பகுதியில் பதிப்புகற்கள் அமைக்கும் பணிக்கு ரூ.**4.00** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அம்மதிப்பீட்டில் GST க்கான வழிவகை எதுவும் செய்யப்படவில்லை தற்பொழுது அனைத்து பணிகளுக்கும் GST12% பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிக்கு ரூ.**48,000/–** ஒப்பந்ததாரர்க்கு வழங்கவும் மற்றும் அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 886 அனுமதி வழங்கப்படுகிறது.**

**27.**இந்நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி பணிகள் மற்றும் இதர பணிகள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விளம்பரங்களை நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினம் ரூ.**10.00** இலட்சத்திற்கு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்காக மற்றும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.இ5/459/12.**

**தீர்மான எண் 887அனுமதி வழங்கப்படுகிறது.**

**28.** உதகமண்டலம் நகராட்சி –பொது நல சுகாதாரப்பிரிவில் சுகாதாரப்பணிக்காக **2018–2019** ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் பிளிச்சிங் பவுடர் , சுண்ணாம்புத்துாள், மற்றும் பினாயில் வாங்க ஆகும் உட்தேச செலவினத் தொகை ரூ.**5,00,000/–** (ஐந்து லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.5016/எச்2/2018.**

**தீர்மான எண் 888அனுமதி வழங்கப்படுகிறது.**

**29.**இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அப்பர் பஜார் நகராட்சி பள்ளியில் வகுப்பறைகளை “Smart Class’’ களாக மாற்றி கல்வியின் தரத்தை உயர்த்தப்பட உள்ளதால் அதற்கான உபகரணங்களான **1.**intractive board 4’’x6’’ **2.** projector for Education purpose **3.** Telescopic bracket , VGA card , power supply card **4.** samacher software **1–5** th std & **6–10**th std package **5.1**KVA Ups , Mic Amplefier **500** GB Hard disc **6.** panel for

computer & Ups 7. ceramic coated green for board 4''x 6'' ஆகியவற்றை பள்ளியில் பொருத்தப்பட வேண்டியுள்ளது. அதன் பிறகு தான் ''Smart Class '' வகுப்புகள் தொடங்கி செயல்படுத்த இயலும், எனவே மேற்கண்ட பள்ளியில் ''Smart Class '' வகுப்புகள் தொடங்க தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,50,000/– க்கு பணிகளை கல்வி நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 889அனுமதி வழங்கப்படுகிறது.**

**30.** இந்நகராட்சிக்கு உட்பட்ட பழைய உதகை மற்றும் கீழ் கோடப்பமந்து ஆகிய பகுதிகளில் உள்ள தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் Smart Class படிப்புகள் தொடங்க உள்ளதால் அதற்கான உபகரணங்கள் 1. Interactive Board 4'0 X 6'0 2. Projector 3. Telescopic Bracket, VGA Card ஆகிய உபகரணங்கள் வாங்கி அவற்றை மேற்கண்ட பள்ளிகளில் பொருத்த வேண்டியுள்ளது. அதன் பிறகு தான் Smart Class வகுப்புகள் தொடங்க முடியும். எனவே மேற்கண்ட பள்ளிகளில் Smart Class வகுப்புகள் தொடங்க தேவையான உபகரணங்கள் வாங்கி பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.50/– இலட்சத்திற்கு கல்வி நிதியின் கீழ் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 890அனுமதி வழங்கப்படுகிறது.**

**31.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் :06 மேல் கோடப்பமந்து பகுதியில் உள்ள கோடப்பமந்து ஏரியில் மழைக்காலங்களில் வனப்பகுதியில் இருந்து அதிகமான வண்டல் மண்கள் அடித்து வரப்பட்டு ஏரியின் பக்கங்களில் படிந்து விடுகின்றன. இதனால் ஏரியின் தண்ணீர் தேக்கம் குறைவாவதுடன் ஏரியில் இருந்து தண்ணீர் வினியோகம் செய்ய முடியாமல் மிகவும் சிரம்மமாக உள்ளது. எனவே மேற்கண்ட ஏரியினை தூர்வார வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.50/– இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 891 அனுமதி வழங்கப்படுகிறது.**

**32.** உதகமண்டலம் நகராட்சியில் அமைந்துள்ள 36 வார்டுகளிலும் 23235 குடியிருப்புகள் அமைந்துள்ளன. அவற்றில் 24565 எண்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளன.அதில் 12908 எண்ணிக்கையில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1097 எண்ணிக்ளைில்ான வரி விதிப்பில் அங்கீகாரமில்லாத மனைப்பிரிவு குடிநீர் இணைப்பு வழங்க இயலாத சிறிய கடைகள் மற்றும் ஒரு கட்டிடத்தில் அமைந்துள்ள கூடுதல் வரி விதிப்புகள் ஆகியவை நீங்கலாக 10560 எண்ணிக்கையில் குடிநீர் இணப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. அதனை நகராட்சி மூலம் பணிகள் மேற்கொண்டு வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கி விட்டு அதன் பின்னர் வீட்டு உரிமைதாரரிடம் மேற்படி செலவினத்தொகையினை வசூலிக்கவும், மேலும் பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூபாய் 450/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி பெரும்

பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு அனுப்பலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு தேவைப்படும் நிதியினை TUFIDCO வட்டியில்லாத கடனாக பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
**மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**ந.க.எண்.இ3/2534/2108)**
**தீர்மான எண் 892 அனுமதி வழங்கப்படுகிறது.**

**33.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN 43 E 1361 வாகனத்தின் பழுது பணிகளை நிவர்த்தி செய்ய கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் — **ரூ.94,965/–**
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர்,
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்

2. திருவாளர்.ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ் — **ரூ.1,05,450/–**
   சங்கர் நகர்,
   சேலம்.

எனவே குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் சேலம் மெயின் ரோடு மேட்டூர். அவர்களுக்கு மேற்படி பணியை செய்ய உத்திரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–**
**அனுமதி வழங்கலாம்.**
**தீர்மான எண் 893 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**34.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN 43 D 6006 வாகனத்தின் பழுது பணிகளை நிவர்த்தி செய்ய கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் — **ரூ.1,75,965/–**
   ஓர்க்ஸ் ஷாப் கார்னர்,
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்

2. திருவாளர்.ஸ்ரீ ஜோதி முருகன் ஓர்க்ஸ் — **ரூ.1,92,300/–**
   சங்கர் நகர்,
   சேலம்.

எனவே குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் சேலம் மெயின் ரோடு மேட்டூர். அவர்களுக்கு மேற்படி பணியை செய்ய உத்திரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–**
**அனுமதி வழங்கலாம்.**
**தீர்மான எண் 894 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**35.** உதகமண்டலம் நகராட்சி பொதுநலப்பிரிவில் TN 43 E 1776 வாகனத்தின் பழுது பணிகளை நிவர்த்தி செய்ய கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் — ரூ.1,97,865/–
   ஒர்க்ஸ் ஷாப் கார்னர்,
   சேலம் மெயின் ரோடு, மேட்டூர்.

2. திருவாளர்.ஸ்ரீ ஜோதி முருகன் ஒர்க்ஸ் — ரூ.2,12,250/–
   சங்கர் நகர்,
   சேலம்.

எனவே குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள திருவாளர். லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சேலம் மெயின் ரோடு மேட்டூர். அவர்களுக்கு மேற்படி பணியை செய்ய உத்திரவு வழங்கவும் மற்றும் அதற்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண் 895 ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

தனி அலுவலர், மற்றும்
ஆணையாளர்
உதகமண்டலம் நகராட்சி.